வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 11.11.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

டெல்லி கார் குண்டு வெடிப்பு சம்பவத்தின் பின்னணியில் உள்ள சதிகாரர்கள் எவரையும், அரசு தப்பவிடாது என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

பீகாரில், 122 தொகுதிகளுக்கான, 2-ஆவது மற்றும் இறுதி கட்ட சட்டமன்றத் தேர்தல் வாக்குப் பதிவு, இன்று நடைபெற்றது.

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், குறிப்பாக நாட்டின் மின்னணுப் பொருட்கள் துறைக்கு, முக்கியப் பலன்கள் ஏற்பட்டுள்ளன.

டெல்லி கார் குண்டு வெடிப்பில் பல உயிர்கள் பலியானது குறித்து, புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி துயரம் வெளியிட்டுள்ளார்.

மோடி- கார்குண்டு

டெல்லி கார் குண்டு வெடிப்பு சம்பவத்தின் பின்னணியில் உள்ள சதிகாரர்கள் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும், இவர்கள் எவரையும், அரசு தப்பவிடாது என்றும், பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று பூட்டானின் திம்பு நகரில், நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், நேற்று இரவு முழுவதும் புலனாய்வில் ஈடுபட்ட விசாரணை ஏஜன்சிகளை, தாம் தொடர்ச்சியான முறையில் தொடர்பு கொண்டுள்ளதாகவும், விசாரணை ஏஜன்சிகள், சதியின் அடி ஆழம் வரை சென்று உண்மைகளை வெளிக் கொணரும் என்றும் கூறினார். அனைவரையும் உலுக்கிய டெல்லி சம்பவத்தைத் தொடர்ந்து, தாம்

கனத்த இதயத்துடன் பூட்டான் வந்திருப்பதாகவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வேதனை தமக்கு நன்றாகவே புரிவதாகவும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நாடே துணை நிற்பதாக அவர் கூறினார்.

இன்றைய தினம் பூட்டானுக்கும், அந்நாட்டின் அரச குடும்பத்திற்கும், மற்றும், உலக அமைதியில் நம்பிக்கை உள்ள அனைவருக்கும் முக்கியமான நாள் என்று பிரதமர் தெரிவித்தார். இந்தியாவிற்கும் பூட்டானுக்கும் இடையிலான பல நூற்றாண்டு கால உறவுகள், மிகவும் ஆழமானவை என்பதால் முக்கியமான இத்தருணத்தில் பங்கேற்பது, இந்தியாவிற்கும், தனிப்பட்ட முறையில் தமக்கும் கடமை என்றே தாம் கருதுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

முன்னதாக பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சரை தொடர்பு கொண்டு நிலவரங்களைக் கேட்டறிந்தார். குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு-வும், அங்கோலாவில் இருந்து மத்திய உள்துறை அமைச்சரை தொடர்பு கொண்டு பேசினார். உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்ட பின்னர், டெல்லி LNJP மருத்துவமனைக்கும் நேரில் சென்று காயம் அடைந்தவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

சம்பவத்தை தொடர்ந்து 15 பேர் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டதாகவும், இதில் 8 பேர் வழியிலேயே உயிர் இழந்த நிலையில், 3 பேரின் உடல் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும், LNJP மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் தெரிவித்தார். சம்பவத்தை தொடர்ந்து உருவாகி வரும் நிலவரங்கள் குறித்து கூடுதல் விவரங்கள்…….

(வாய்ஸ்)

டெல்லி கார் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று புதுடெல்லியில், பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து உயர்நிலை மறுஆய்வுக் கூட்டம் நடத்தினார். உள்துறை அமைச்சரின் இல்லத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மத்திய

உள்துறை செயலர், உளவுப் பிரிவு இயக்குநர், டெல்லி காவல் துறை ஆணையர், தேசிய புலன் ஆய்வு ஏஜன்சியின் தலைமை இயக்குநர் ஆகியோர், நேரடியாகவும், டெல்லி காவல் துறை தலைவர், மெய்நிகர் முறையிலும் பங்கேற்றனர். சம்பவம் குறித்த விசாரணைகளை, மத்திய உள்துறை அமைச்சகம், தேசிய புலனாய்வு ஏஜன்சியிடம் ஒப்படைத்துள்ளது.

இதற்கிடையே, டெல்லியில், செங்கோட்டை மெட்ரோ ரயில் நிலையம், பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்டுள்ள போதிலும், இதர ரயில் நிலையங்கள் வழக்கம் போல் செயல்படுவதாக, மெட்ரோ ரயில் கழகம் தெரிவித்துள்ளது.

டெல்லி கார் குண்டு வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து, டெல்லியிலும், நாட்டின் இதர பகுதிகளிலும், பாதுகாப்பு வலுப்படுத்தப் பட்டுள்ளது. புதுச்சேரியிலும், எல்லைப் பகுதிகள் மற்றும் முக்கிய சந்திப்புகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு, போலீஸ் ரோந்துப் பணிகள் தீவிர மாக்கப்பட்டுள்ளன.

*ராஜ்நாத் சிங்*

பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் இன்று புதுடெல்லியில், பாதுகாப்பு துறையின் சவால்கள் பற்றிய, டெல்லி பேச்சு வார்த்தை மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். டெல்லி கார் குண்டு வெடிப்பு சம்பவத்தில் தொடர்புடைய எவரையும் அரசு தப்பவிடாது என்று அவர் உறுதி அளித்தார். பாதுகாப்புத் துறையில் தொழில் நுட்பங்களுக்கு அப்பாற்பட்டு, பயிற்சி, திட்டமிடல் உள்ளிட்ட இதர அம்சங்களிலும், உலக அளவிலான நல்ல நடைமுறைகளைப் பின்பற்றுதல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

*பீகார் தேர்தல்*

பீகாரில், 20 மாவட்டங்களுக்கு உட்பட்ட 122 தொகுதிகளுக்கு, 2-ஆவது மற்றும் இறுதி கட்ட சட்டமன்றத் தேர்தல் வாக்குப் பதிவு, இன்று நடைபெற்றது. பிற்பகல் 3 மணி நிலவரப் படி, 60.40 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்தன. இறுதி வாக்குப் பதிவு சதவிகிதம் பற்றிய விவரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. கடந்த 6-ஆம் தேதி நடைபெற்ற முதல் கட்ட

பீகார் சட்டமன்ற தேர்தலில் சுமார் 65 சதவிகித வாக்குகள் பதிவான நிலையில் இன்றைய 2-ஆம் கட்ட தேர்தலையும் சேர்த்து 2 கட்டங்களிலும் பதிவான வாக்குகள், வரும் 14-ஆம் தேதி எண்ணப்படும்.

*பழங்குடி*

பழங்குடி மரபுகளை பேணிப் பாதுகாக்கும் பொறுப்பு, பழங்குடியினர் உட்பட அனைவருக்கும் இருப்பதாக, **மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை இணை அமைச்சர்** திருமதி சாவித்திரி தாக்கூர் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், **தேசிய பழங்குடியினர் எழுத்தறிவு விழாவில்** உரையாற்றிய அவர் இந்தியாவின் பல்வேறு பழங்குடிக் குழுக்களுக்கு, வளமான வரலாறு உண்டு என்றும், இந்த வரலாற்று மரபுகளை, குழந்தைகளுக்கான கதையாக **மாற்றி வழங்க** முடியும் என்றும் கூறினார். ஆங்கிலம் போன்ற பிரபலமான மொழிகளுக்கு இணையான அந்தஸ்தை, மரபு சார்ந்த மொழிகளுக்கும், வழங்குதல் அவசியம் என்று, அவர் வலியுறுத்தினார். மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சகம், பழங்குடிக் கலாச்சாரத்தின் பன்முகத் தன்மையை வெளிப்படுத்தும் வகையில் இந்த 2 நாள் விழாவிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

*ஜிஎஸ்டி-மின்னணு*

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் அமலாகி வரும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. மின்னணு பொருட்கள் மீதான வரிக் குறைப்பினால் மக்கள் எப்படியெல்லாம் பயன் பெற்று வருகிறார்கள் என்பது குறித்த, ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

அன்றாடப் பயன்பாட்டிற்கான பல்வேறு பொருட்கள் மீதான ஜிஎஸ்டி குறைக்கப் பட்டுள்ளதால் நாட்டில் சாதாரண மக்கள் பெருமளவில் பயன்பெற்று வருகின்றனர். புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் படி, தொலைக்காட்சி பெட்டி, டிஷ்-வாஷர், மற்றும் குளிர்சாதன கருவி உட்பட பல்வேறு பொருட்கள், 28 சதவிகித வரி

அடுக்கில் இருந்து, 18 சதவிகித அடுக்கிற்கு மாற்றப்பட்டுள்ளதால், இப்பொருட்களின் விற்பனை விலை குறைந்திருப்பதுடன், நாட்டின் மின்னணு உற்பத்தி துறையும் ஊக்கம் பெற்றுள்ளது. கணிப்பொறித் திரைகள் மற்றும் புரொஜக்டர் கருவிகள் மீதான ஜிஎஸ்டியும் 18 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால், அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் டிஜிட்டல் பயிற்சி நிறுவனங்களின் செலவு குறைந்து புதுமையாக்கம் மற்றும் ஸ்டார்ட்-அப் முயற்சிகள் வலுப்பெறவும் வழி ஏற்பட்டுள்ளது. சோலார் தகடுகள் உட்பட புதுப்பிக்க வல்ல எரிசக்தி கருவிகள் மீதான வரியும், 12-ல் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால், தூய மின்சாரம், குறைந்த விலையில் மக்களுக்கு கிடைக்க ஏதுவாகி உள்ளது. பல்வேறு துறைகளில் உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து இறக்குமதியை குறைக்கும் நோக்கிலான அரசின் மேக் இன் இண்டியா திட்டத்திற்கும், புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் பெருமளவில் உதவி வருகின்றன.

*ரங்கசாமி-இரங்கல்*

டெல்லி செங்கோட்டை அருகே கார் குண்டு வெடிப்பில் பல உயிர்கள் பலியானது குறித்து புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி துயரம் வெளியிட்டுள்ளார். குண்டுவெப்பில் உயிரிழந்த அனைவரின் குடும்பங்களுக்கும் இரங்கல் தெரிவித்துக் கொள்வதாகவும், காயம் அடைந்தவர்கள் விரைவில் குணம் பெற தாம் வேண்டுவதாகவும், இரங்கல் செய்தியில் அவர் கூறி உள்ளார். தேச ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலான இந்த குண்டு வெடிப்பு, கண்டனத்திற்கு உரியது என்றும், தேசத்தை அச்சுறுத்தும் வகையிலான இத்தகைய செயல்களுக்கு எதிரான மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு, புதுச்சேரி அரசு எப்போதும் துணை நிற்கும் என்றும் முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

*புதுச்சேரி-உலகப் போர்*

முதல் உலகப் போர் நிறைவு பெற்றதன் 107-ஆம் ஆண்டு நினைவு நாளான இன்று புதுச்சேரியில், இந்தியாவிற்கான பிரஞ்ச் தூதர் திரு தியரி மாத்தூ, புதுச்சேரிக்கான பிரஞ்ச் துணைத் தூதர் திரு எட்டியன்

ரோலண்ட்-பீக், புதுச்சேரி அரசு சார்பில் மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் ஆகியோர், கடற்கரை சாலையில் உள்ள பிரஞ்ச் போர் வீரர் நினைவுத் தூணில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். முன்னதாக, இந்தியா-பிரான்ஸ் நாடுகளின் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டு, இருநாட்டு தேசிய கீதங்களும் இசைக்கப்பட்டன. 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப் பட்டது.

கணக்கெடுப்பு

புதுச்சேரியில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளின் கீழ், வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்பு படிவங்களை வழங்கும் பணிகள், 92.5 சதவிகிதம் முடிவடைந்துள்ளன. மாநில தலைமை தேர்தல் அதிகாரி, இன்று, மங்கலம் மற்றும் லாஸ்பேட் தொகுதியில் கள ஆய்வு மேற்கொண்டு, இப்பணிகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தார். கணக்கெடுப்பு படிவங்களை பூர்த்தி செய்வதிலும், வாக்குச் சாவடி நிலை அதிகாரிகள், வாக்காளர்களுக்கு உதவி புரிவார்கள் என்பதால், வாக்காளர்கள் குழப்பமடைய வேண்டாம் என்று, மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகம் கேட்டுக் கொண்டுள்ளது. படிவம் தொடர்பான சந்தேகங்களுக்கு, கைபேசி எண், மொபைல் செயலி, அல்லது இணையதளம் மூலமாக, வாக்குச் சாவடி நிலை அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளலாம் என்றும், அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி-போராட்டம்

புதுச்சேரியில், சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளைக் கண்டித்து, இண்டியா கூட்டணி கட்சிகள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. அண்ணா சிலை அருகே நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில், முன்னாள் முதலமைச்சர் திரு நாராயணசாமி, பிரதேச காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு வைத்திலிங்கம், திமுக சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும், திமுக-காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். தமிழகத்திலும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளைக் கண்டித்து, ஆளும் திமுகவும், அதன் தோழமைக் கட்சிகளும் இன்று மாநிலமெங்கும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டன.

*வானிலை*

இன்று தென் தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நெல்லை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும், குமரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*மகளிர் கிரிக்கெட்*

பார்வை திறன் குன்றியவர்களுக்கான முதலாவது மகளிர் 20-ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடர், புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது. இந்தியா, இலங்கை, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், நேபாளம் ஆகிய 6 நாடுகளின் அணிகள் இதில் பங்கேற்றுள்ளன. இந்தியாவும்,இலங்கையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இப்போட்டித் தொடர் வரும் 23-ஆம் தேதி வரை நடைபெறும். அன்றைய தினம் இலங்கையின் கொழும்பு நகரில் இறுதிப் போட்டி நடைபெற உள்ளது. புதுடெல்லியில் இன்று நடைபெற்ற தொடக்க விழாவில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு அனுராக் தாக்கூர், முன்னாள் மத்திய அமைச்சரும், போட்டிகளுக்கான ஏற்பாட்டுக் குழுவின் தலைவருமான திருமதி மீனாட்சி லேக்கி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*அறிவியல்*

இளைஞர்களின் நாடு என்பதில் இந்தியாவிற்கு பெருமைதான் என்றாலும், நாட்டில், மூத்த குடிமக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டுதான் வருவதை, மறந்து விடக் கூடாது என்று, மத்திய அறிவியல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறி உள்ளார். இதனால் ஏற்படும் நிலவரங்களை, சவாலாக அன்றி, வாய்ப்பாக எடுத்துக் கொள்ளுதல் அவசியம் என்று, அவர் இன்று புதுடெல்லியில், மூத்த குடிமக்களுக்கான ஆதரவு சேவைகள் பற்றிய, சிஐஐ மாநாட்டில் பேசுகையில் கூறினார். இந்தியாவில் மூத்த குடிமக்களுக்கான ஆதரவு சேவைகள், கருணை, புதுமையாக்கம் மற்றும் தொழில் நுட்பங்களின் அடிப்படையில், புதிய சகாப்தம் ஒன்றை எட்டி இருப்பதாகவும், முக

அங்கீகார தொழில் நுட்பம் மூலமாக ஆயுள் சான்றிதழ் சமர்ப்பிக்கும் வாய்ப்பு, ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படுவதே, இதற்கு சான்றாகும் என்றும் அமைச்சர் கூறினார். இந்திய இளைஞர்களின் ஆற்றலையும், மூத்த குடிமக்களின் அனுபவத்தையும், இன்னும் அதிகமாக ஒருங்கிணைத்தால், நாடு புதிய உயரங்களை எட்ட முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

டெல்லி கார் குண்டு வெடிப்பு சம்பவத்தின் பின்னணியில் உள்ள சதிகாரர்கள் எவரையும், அரசு தப்பவிடாது என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

பீகாரில், 122 தொகுதிகளுக்கான, 2-ஆவது மற்றும் இறுதி கட்ட சட்டமன்றத் தேர்தல் வாக்குப் பதிவு, இன்று நடைபெற்றது.

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், குறிப்பாக நாட்டின் மின்னணுப் பொருட்கள் துறைக்கு, முக்கியப் பலன்கள் ஏற்பட்டுள்ளன.

டெல்லி கார் குண்டு வெடிப்பில் பல உயிர்கள் பலியானது குறித்து, புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி துயரம் வெளியிட்டுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------